நேரு குழந்தைகள் புத்தகாலயம்

மெட்ரோ ரயிலில் ஒரு பயணம்


பங்கஜ் சதுர்வேதி

சித்திரங்கள்
ரத்னாகர் சிங்

தமிழாக்கம்
டி. மதன் ராஜ்




நேஷனல் புக் டிரஸ்ட், இந்தியா




அசோக் நகருக்கு மூணு
டிக்கெட் குடுங்க.


ஒரு நாணயம் போல இருக்கே
இந்த டோக்கன்... இதுதான்
மெட்ரோ டிக்கெட்.

இந்த டோக்கனை அந்த
வட்டத்தின் மீது வைக்கணும்.




ஹை...! இந்தப் படிகள்
நகருதே...!



இல்லம்மா கண்ணு. இங்கேயே நில்லு.
அது வெளியே போறவங்களுக்கான வழி.




செல்லம்...! உன்னுடைய முறை வருகிற வரை
வரிசையில் காத்திருக்கணும்.


நீங்க இங்கே
உட்கார்ந்துக்குங்க.
பெண்கள்


அம்மா... நம்ம வீடு
அந்தப் பக்கம்தானே
இருக்கு!

இப்போ மெட்ரோ ஒரு குகைப் பாதைக்குள் போகுது.





நாம போகிற வழியில் இருக்கிற
எல்லா இடங்களின் பெயர்களும்
அறிவிக்கப்படுது.


ஹை...! எவ்ளோ பெரிய ஏரோபிளேன்!
நாமும்கூட பறக்கிற
மாதிரியே இருக்கு!


நாம அந்தப்பக்கமா போகணும், இல்லையா ?



வெளியே போக கதவு
திறக்கணும்னா டோக்கனை
உள்ளே நுழைக்கணும்.